9

Namma Kalvi

# 9

# பொருளியல்

பொருளியல்

www.nammakalvi.in





# பாடம் 1 மேம்பாட்டை அறிவோம்: தொலைநோக்கு அளவீடு மற்றும் நிலைத்தன்மை

## பயிற்சிகள்

### I. சரியான விடையினைத் தேர்வு செய்க :

1. **கூற்று (A)** : மேம்பாடு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.

**காரணம் (R)**: மக்கள் அதிக வருவாய், சிறந்த கல்வி, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து, குறைந்த வறுமை பெறுவார்கள்.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது **[விடை: அ]**

2. **மனித வளம் எனும் சொல் குறிப்பிடுவது.**
அ) ஏழை மக்கள் மீதான முதலீடு
ஆ) வேளாண்மை மீதான செலவு
இ) சொத்துக்கள் மீதான முதலீடு
ஈ) ஒட்டு மொத்த மக்களின் திறமை **[விடை: ஈ]**

3. **நாடுகளுக்கு இடையேயான மேம்பாட்டை ஒப்பிட அவர்களின் மிக முக்கிய பண்புகளில் ஒன்றாக கருதப்படுவது.**
அ) வளர்ச்சி ஆ) வருமானம்
இ) செலவீனம் ஈ) சேமிப்புகள் **[விடை: ஆ]**

4. **தேசிய வருமானத்தின் உண்மை மதிப்பீடாக இவை கருதப்படுகிறது.**
அ) மொத்த நிகர உற்பத்தி ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
இ) நிகர தேசிய உற்பத்தி ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி **[விடை: ஈ]**

5. **________ வருவாயை தலா வருமானம் என்றும் அழைக்கிறோம்.**
அ) சராசரி ஆ) மொத்த இ) மக்கள் ஈ) மாத **[விடை: அ]**

6. **ஜி-8 நாடுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று**
அ) ஜப்பான் ஆ) கனடா இ) ரஷ்யா ஈ) இந்தியா **[விடை: ஈ]**

**7. சார்க் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று**

அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) சீனா ஈ) பூடான் **[விடை: இ]**

**8. கூற்று (A)** : நிகர தேசிய உற்பத்தி என்பது தேசிய உற்பத்தி அளவின் உண்மை மதிப்பீடாக கருதப்படுகிறது.

**காரணம் (R)**: இது தேசிய வருமானம் என்று அழைக்கப்படுகிறது.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது **[விடை: அ]**

**9. கூற்று (A)** : எந்த ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கும் மனித வளம் அத்தியாவசியமாக இருக்கிறது.

**காரணம் (R)**: கல்வி மற்றும் மக்கள் நலத்தில் முதலீடு செய்வதன் விளைவாக அவர்களின் எதிர்காலத்தில் அதிக அளவு பலன் கிடைக்கும்.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது **[விடை: அ]**

**10. மனிதவள மேம்பாட்டு குறியீடு (HDI) கணக்கில் பின்வரும் எந்தப் பரிமாணத்தை எடுத்துக் கொள்ளவில்லை?**

அ) பாலினம் ஆ) உடல்நலம் இ) கல்வி ஈ) வருமானம் **[விடை: அ]**

**11. பின்வரும் எம்மாநிலத்தின் கல்வியறிவு தேசிய கல்வியறிவு விகிதத்தை காட்டிலும் அதிகமாக உள்ளது?**

அ) ஆந்திரபிரதேசம் ஆ) உத்திரபிரதேசம்
இ) தமிழ்நாடு ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ]**

**12. பாலின விகிதம் என்பது**

அ) வயதான ஆண் மற்றும் வயதான பெண் விகிதம்
ஆ) ஆண்கள் மற்றும் பெண்கள் விகிதம்
இ) ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலவும் சமூக தொடர்பு
ஈ) ஆயிரம் ஆண்களுக்கு எத்தனை பெண்கள் என்ற விகிதம் **[விடை: ஈ]**

**13. பரம்பரை ரீதியான சமத்துவம் எந்த நடைமுறையில் உறுதி செய்யப்படுகிறது?**

அ) தொழிற்சாலை ஆ) பொருளாதார மேம்பாடு
இ) நிலையான மேம்பாடு ஈ) பொருளாதார வளர்ச்சி **[விடை: இ]**

**14. பொருந்தாத ஒன்றை கண்டறி.**

அ) சூரிய ஆற்றல் ஆ) காற்று ஆற்றல்

இ) காகிதம் ஈ) இயற்கை வாயு [விடை : இ]

**15. இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றல் உற்பத்தியைச் செய்யும் மாநிலம்**

அ) தமிழ்நாடு ஆ) மேற்கு வங்காளம்

இ) கேரளா ஈ) ஆந்திரப்பிரதேசம் [விடை: அ]

**16. பல ஆண்டுகளின் உபயோகத்திற்குப் பிறகு தீர்ந்து போகும் வளம்**

அ) இயற்கை ஆ) புதுப்பிக்க இயலும்

இ) புதுப்பிக்க இயலாது ஈ) புதியவை [விடை: இ]

**17. அனல் மின் நிலையம் அதிக அளவிளான ---------- வெளியிடுவதால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது.**

அ) ஆக்சிஜன் ஆ) நைட்ரஜன்

இ) கார்பன் ஈ) கார்பன்-டை-ஆக்சைடு [விடை: ஈ]

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. எந்த ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு ________ என்று அறியப்படும்.
   **விடை: பொருளாதார முன்னேற்றம்**
2. மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தலைமையகம் ________
   **விடை: சாஸ்திரி பவன், புதுடெல்லி**
3. இந்தியாவில் அதிக கல்வியறிவு பெற்றுள்ள மாநிலம் ________. **விடை: கேரளா**
4. உலகளவில் மனிதவள மேம்பாட்டு அறிக்கையைத் தயாரித்து வெளியிடுகின்ற நிறுவனம் ________ **விடை: ஐக்கிய நாடுகள் அவை**
5. நிலத்தடி நீர் என்பது ________ வளங்களின் ஓர் எடுத்துக்காட்டாகும். **விடை: புதுப்பிக்கதக்க**
6. An Uncertain Glory என்ற புத்தகத்தை எழுதியவர் ________ **விடை: அமர்த்தியா சென்**

## III. பொருத்துக. (விடையுடன்) :

| | | |
|---|---|---|
| 1. மேம்பாடு | – | தினசரி வாழ்க்கையின் ஒரு பகுதி |
| 2. மனித வளம் | – | கல்வி |
| 3. சூரிய சக்தி | – | புதுப்பிக்க தக்க வளங்கள் |
| 4. 1972 | – | வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் |

## IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி :

**1. மேம்பாடு என்பதற்கு நீங்கள் என்ன பொருள் கொள்கிறீர்கள்?**

✦ மேம்பாடு என்னும் சொல், ஒரு குறிப்பிடத் துறையின் அல்லது ஒரு குறிப்பிட்ட நபரின் மேம்பாட்டைக் குறிக்கிறது.

- ✦ ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது அதன் பொருளாதார மேம்பாடு என்று அறியப்படுகிறது.

**2. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?**

பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள்:

NNP – நிகர நாட்டு உற்பத்தி
PCI – தனிநபர் வருமானம்
PPP – வாங்கும் திறன் சமநிலை
HDI – மனிதவள மேம்பாட்டுக் குறியீடு

**3. ஒரு நாட்டின் வளர்ச்சியைப் பிற நாடுகளுடன் ஒப்பிடுவதற்கு நிகர நாட்டு உற்பத்தி பயனுள்ள அளவீடாகக் கருதப்படாதது ஏன்?**

- ✦ ஒரு நாட்டின் வளர்ச்சியைப் பிற நாடுகளுடன் ஒப்பிடுவதற்கு நிகர நாட்டு உற்பத்தி பயனுள்ள அளவீடாகக் கருதப்படுவதில்லை.
- ✦ காரணம் ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு இன மக்கள் வாழ்கிறார்கள். நாட்டின் மொத்த வருவாயை ஒப்பிட்டு சராசரி தனிநபர் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளதென்று சொல்ல முடியாது.
- ✦ நாட்டின் தலா வருமானமே ஒரு நாட்டின் வளர்ச்சியை பிற நாடுகளுடன் ஒப்பிட முடியும்.

**4. எந்த ஒரு நாட்டினுடைய முதன்மை வளமாக மனித வளம் கருதப்படுவது ஏன்?**

- ✦ எந்த ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் மனித வளங்கள் அவசியமாகும். நாட்டின் பிற வளங்களை உற்பத்தி வளங்களாக மாற்ற கூடிய திறமை மனித வளத்திடம் மட்டுமே உள்ளது.
- ✦ மனிதனின் உடல் திறன், சுகாதார திறன்கள், கல்வி, உடல்நலன், அதிக வருமானத்திற்கான முதலீடு அனைத்தும் மனித வளத்தில் அடங்கும்.

**5. பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க.**

**1. PPP 2. HDI**

- ✦ PPP – வாங்கும் திறன் சமநிலை
- ✦ HDI – மனிதவள மேம்பாட்டுக் குறியீடு

**6. பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க.**

**1. NNP 2. PCI**

- ✦ NNP – நிகர நாட்டு உற்பத்தி
- ✦ PCI – தனி நபர் வருமானம்

**7. சூரிய சக்தி என்றால் என்ன?**

- ✦ சூரிய சக்தி என்பது சூரிய ஒளி மூலம் மின்சக்தியை நேரடியாக சூரிய ஒளியின் மின்னழுத்த செல்கள் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்தப்படுவதாகும்.

✦ சூரிய ஒளி தகடுகள் சூரிய ஒளியினை மின் சக்தியாக மாற்ற சூரிய ஒளியை வேதி வினைக்கு உட்படுத்தி ஆற்றலாக மாற்றுகிறது. சூரிய மின் தகடு அமைப்பின் மூலம் வீடு மற்றும் அலுவலகத்திற்கு தேவையான மின்சாரம் தயாரிக்க முடியும்.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி :

**1. நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பற்றி விவரி.**

**நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகள்:**

**மரபுசாரா வளங்களை பயன்படுத்துதல் :**

இந்தியாவின் மின்சார தேவைகளுக்கு அனல் மின்சார மற்றும் புனல் மின்சார நிலையங்களையே நாம் சார்ந்துள்ளோம். இவை கார்பன்-டை-ஆக்சைடை வெளியேற்றுவதால் சுற்று சூழல் பாதிக்கப்படுகின்றது.

**சூரிய சக்தி :**

சூரிய ஒளி தகடுகள் சூரிய ஒளியினை மின் சக்தியாக மாற்றுகின்றன. இதன் மூலம் வீடு மற்றும் அலுவலகங்களுக்கு தேவையான மின்சாரத்தை தயாரிக்க முடியும்.

**சுற்றுச் சூழல் கொள்கைகள்:**

காற்று, நீர் மாசுபாடு, கழிவு மேலாண்மை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு போன்ற சிக்கல்களை எதிர்கொள்ளும் விதமாக சுற்று சூழல் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியா குறைவான வளங்களுடன் பொருளாதார மேம்பாட்டை அடைய பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியாவின் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகள், நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் கூடுதல் அதிகாரங்கள் மூலம் சுற்றுசூழல் பாதுகாப்பில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது.

**2. இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக விவரிக்கவும்.**

✦ இந்தியா தன் சுற்றுசசூழல் கொள்கைகளைக் கடந்த முப்பது ஆண்டுகளாக உருவாக்கிக் கொண்டு வந்துள்ளது. காற்ற, நீர் மாசுபாடு, கழிவு மேலாண்மை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு போன்ற சிக்கல்களை எதிர்கொள்ளும் விதமாக சுற்று சூழல் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

✦ இந்தியாவின் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகள், நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் கூடுதல் அதிகாரங்கள் மூலம் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த உத்திரவிட்டுள்ளது.

✦ இந்திய அரசியலமைப்பின் பிரிவு 51A(g) காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் காட்டு உயிர்கள் மற்றும் இயற்கைச் சூழலைப் பேணவும் மேம்படுத்தவும் அனைத்து உயிரினங்களையும் பாதுகாக்கவும் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் கடமைப்பட்டுள்ளனர் என்று வலியுறுத்துகிறது.

- மக்களுக்கு அதிக வருமானம், திறன் மிக்க கல்வி, சிறந்த சுகாதாரம், ஊட்டச்சத்து உணவு, வறுமையற்ற நிலை, சம வாய்ப்பு ஆகியவற்றைக் கொண்டு வாழ்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதே இந்தியாவின் சுற்று சூழல் கொள்கையாகும்.

**3. புதுப்பிக்க தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்க தகாத வளங்கள் - வேறுபடுத்துக.**

| | புதுப்பிக்க தக்க வளங்கள் | புதுப்பிக்க தகாத வளங்கள் |
|---|---|---|
| 1. | மாசற்றது. சுற்று சூழல் நலம் காக்கிறது. | சூழலை மாசுபடுத்தும். சூழலை சேதப்படுத்தும். |
| 2. | இந்த வளங்கள் புதுப்பிப்பதற்காக ஒரு குறுகிய நேரத்தை எடுத்துக் கொள்ளும். | இந்த வளங்கள் உருவாக்குவதற்குப் பல நூற்றாண்டுகள் தேவைப்படுகின்றன. |
| 3. | **எ.கா:** - சூரியசக்தி, காற்று, நீர், மரம், காகிதம் | **எ.கா:** - உலோகங்கள், கண்ணாடி, புதைபடிவ எரிபொருட்கள் (நிலக்கரி, பெட்ரோல், இயற்கை வாயு, டீசல்.) |

**4. ஏதேனும் ஐந்து சுற்றுச்சூழல் சட்டங்களையும் அவற்றின் செயல்களையும் விவரி.**

இந்தியாவின் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகள், நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் கூடுதல் அதிகாரங்கள் மூலம் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது.

**சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டங்கள்:**

**தேசிய பசுமை தீர்ப்பாய சட்டம் 2010**

சுற்றுச் சூழல் பாதுகாப்பு, காடுகள் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கிறது.

**பல்லுயிர்மை பாதுகாப்புச் சட்டம் 2002**

பல்லுயிர்மைகளைப் பாதுகாத்தல்

**சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986.**

சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான அதிகாரம் வழங்குதல்

**வன (பாதுகாப்பு) சட்டம் 1980**

காடுகளை அழித்தலை தடைசெய்தல் மற்றும் காடுகள் அல்லாத பகுதிகளில் மரம் வளர்த்தலை ஊக்கப்படுத்துதல்.

**வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் 1972**

காட்டு விலங்குகள் மற்றும் பறவைகளுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது.

## VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள் :

**1. உலகெங்கும் காணப்படும் குப்பை மற்றும் கழிவுகளின் பிரச்சனைகளைப் பல்வேறு வழிகளில் பட்டியலிடுக.**

- ✦ நகரங்களில் குப்பைகள், கழிவுகள் அளவிற்கு அதிகமாக காணப்படுகின்றது.
- ✦ நகர குப்பைகள் நகர எல்லையில் குவிக்கப்படுகின்றது. குப்பை மேடாகவும், நாற்றத்துடனும் உள்ளது.
- ✦ நீர் நிலைகள் அசுத்தமடைந்து, குடிநீர் மாசுபடுகிறது.
- ✦ 'பிளாஸ்டிக்' குப்பைகள் பெருகி வருகின்றன.

இது போன்ற பிரச்சனைகளை பட்டியலிடவும்.

## VII. சிந்தனை வினா :

**1. உனது பகுதியில் நீங்கள் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை பற்றி விவரி.**

உனது ஊர், உனது வீடு, உன் பள்ளி அமைந்துள்ள இடம், - இவ்விடங்களில் நீ காணும் சுற்றுசூழல் பிரச்சனைகளை பட்டியலிட்டு விவரிக்கவும்.

## VIII. வாழ்வியல் திறன் :

**1. தனிநபர் வருமானத்தை எவ்வாறு கணக்கிடுவாய்?**

தனிநபர் வருமானம் = தலா வருமானம்

தலா வருமானம் = நாட்டின் மக்கள் தொகை ÷ நாட்டின் மொத்த வருவாய்

# கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

**1. உலக வங்கியின் அறிக்கையின் படி நாடுகளின் தலா வருமானத்தில் குறைந்த வருவாயின் அளவு**

அ) <1005 ஆ) <1000 இ) <800 ஈ) <2005 [விடை: அ]

**2. தனிநபர் வருமானத்தின் கணக்கீடுகள் சர்வதேச அளவில் ஒப்பிட ______ மட்டுமே கணக்கிடப்படுகிறது.**

அ) அமெரிக்க டாலரில் ஆ) இந்திய ரூபாய்

இ) பவுண்ட் ஈ) யென் [விடை: அ]

**3. வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு**

அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) ஜப்பான்

இ) இங்கிலாந்து ஈ) இந்தியா [விடை: ஈ]

www.nammakalvi.in





**4. தமிழ்நாட்டின் கல்வியறிவு விகிதம்**

அ) 80.06 % ஆ) 80.09% இ) 80.07% ஈ) 80.05% **[விடை: ஆ]**

**5. தமிழ்நாட்டின் பாலின விகிதம் (1000 ஆண்டுகளில்) தலா பெண்களின் எண்ணிக்கை**

அ) 990 ஆ) 996 இ) 970 ஈ) 980 **[விடை: ஆ]**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ______ நாட்டின் மேம்பாட்டை அளவிடும் சிறந்த குறியீடு ஆகும். **விடை: தனிநபர் வருமானமே**
2. சராசரி வருமானம் ________ என்று அழைக்கப்படுகின்றது. **விடை: தலா வருமானம்**
3. வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில் முதலிடத்தில் உள்ள நாடு _______ **விடை: சீனா**
4. இந்தியாவில் மனித வளங்களின் வளர்ச்சிக்கு ________ பொறுப்பாகும். **விடை: மனித வள மேம்பாட்டு அமைச்சகம்**
5. தென் மாநிலங்களில் கல்வியறிவு வீதத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ள மாநிலம் __________ **விடை: தமிழ்நாடு**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | மனித வள மேம்பாட்டுக் குறியீட்டெண் | - | HDI |
| 2. | நிலத்தடி நீர் | - | புதுப்பிக்கத் தகுந்த வளம் |
| 3. | புதை படிவ எரிபொருட்கள் | - | புதுப்பிக்க இயலாத வளம் |
| 4. | சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் | - | 1986 |
| 5. | அமர்த்தியா சென் | - | நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் |

## IV. சுருக்கமான விடையளி :

**1. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?**

ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் குறிப்பிட்டக் காலத்திற்குள் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே, மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

**2. கல்வி, சுகாதாராம் இவை மிக சிறந்த முதலீடு. நியாயப்படுத்து.**

மனித வள மேம்பாட்டு என்பது மனிதனின் உடல்திறன் மற்றும் சுகாதாராத் திறன்களை கல்வியின் மூலம் மேம்படுத்துவதாகும். எனவே மனித வளத்தில் கல்வி மற்றும் உடல்நலத்தில் செய்யப்படும் முதலீடு எதிர்காலத்தில் உயர்ந்த வருமானத்தை அளிக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் நல்ல கல்வி, சிறந்த சுகாதாரம் எதிர்காலத்தில் அவர்களுக்கு அதிக வருமானம் பெறக்கூடிய முதலீடு ஆகும்.

**3. நிலையான பொருளாதார மேம்பாடு என்பது என்ன?**

நிலையான பொருளாதார மேம்பாடு என்பது, தற்போதுள்ள சுற்றுச்சூழலைச் சேதப்படுத்தாமல் மேம்பாடு அடைய வேண்டும். எதிர்கால சந்ததியினரின் தேவைகளுக்காக, எவ்வித சமரசமும் செய்து கொள்ளக் கூடாது.

**4. வனம், வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டங்கள் யாவை?**

- பல்லுயிர்மை பாதுகாப்புச் சட்டம் 2002
- வன பாதுகாப்பு சட்டம் 1980
- வன விலங்குகள் பாதுகாப்பு சட்டம் 1972

**5. தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள சமூக நலத்திட்டங்கள் சிலவற்றைக் கூறுக.**

தமிழ்நாட்டில் பல சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவை மத்திய உணவு வழங்கும் திட்டம், சுகாதார மையங்கள், சாலை வசதிகள், பொதுப்போக்குவரத்து, குடிநீர் வசதி, மின் இணைப்பு வழங்குதல் போன்றவை ஆகும்.

## V. விரிவான விடையளி :

**1. தமிழ்நாட்டில் பொருளாதார சமூக முன்னேற்றம் குறித்து விரிவான விடை தருக.**

தமிழ்நாடு குறைந்த காலகட்டத்துக்கள் மிக விரைவான வளர்ச்சியை எட்டிய சில மாநிலங்களில் ஒன்றாகும்.

- தமிழ்நாட்டில் மதிய உணவு வழங்கும் திட்டம், சுகாதார மையங்கள், சாலை வசதிகள், பொதுப் போக்குவரத்து, குடிநீர் வசதி, மின் இணைப்பு வழங்குதல் போன்ற சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- பொதுக்கல்வி, மருத்துவ மற்றும் சுகாதாரத் துறை, சமூகப்பாதுகாப்பு, பொதுநல வசதிகள் போன்ற துறைகளில் முன்னேற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.
- சிறப்பான நிர்வாகத் திறடை, மரபு ரீதியாக அமைந்த சில அமைப்புகள், சுகாதாரமையங்கள், அரசு அலுவலகங்கள், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை மற்ற மாநிலங்களை விட சிறப்பாக செயல்படுகின்றன.
- சாதி மற்றும் சமத்துவமின்மையைக் களைவதில் தமிழகம், கேரளா, இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சிறப்பான அக்கரை காட்டி வருகின்றன.
- தமிழ்நாட்டின் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கு, மனித திரன்கள் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் அதிகரித்துள்ளது. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

பொருளியல்

# பாடம் 2 இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு

## பயிற்சிகள்

### I. சரியான விடையினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பணியிடத்தைக் கணக்கிடுவதற்கு __________ வயது வரையிலான வயதை கணக்கிடலாம்.
அ) 12 - 60 ஆ) 15 - 60 இ) 21 - 65 ஈ) 5 - 14 [விடை: ஆ]

2. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல்வேறு துறைகளில் எந்த இறங்கு வரிசை சரியானது?
அ) முதன்மை துறை, இரண்டாம் துறை, சார்புத் துறை
ஆ) முதன்மை துறை, சார்புத் துறை, இரண்டாம் துறை
இ) சார்புத் துறை, இரண்டாம் துறை, முதன்மைத் துறை
ஈ) இரண்டாம் துறை, சார்புத் துறை, முதன்மைத் துறை [விடை: அ]

3. பின்வரும் துறைகளில் இந்தியாவில் மிகப்பெரிய வேலைவாய்ப்புத் துறை எது?
அ) முதன்மைத் துறை ஆ) இரண்டாம் துறை
இ) சார்புத் துறை ஈ) பொதுத் துறை [விடை: அ]

4. பின்வருவனவற்றுள் எது முதன்மைத் துறை சார்ந்ததல்ல?
அ) வேளாண்மை ஆ) உற்பத்தி
இ) சுரங்கத் தொழில் ஈ) மீன் பிடித் தொழில் [விடை: ஆ]

5. பின்வருவனவற்றுள் எது இரண்டாம் துறையை சார்ந்ததல்ல?
அ) கட்டுமானம் ஆ) உற்பத்தி இ) சிறு தொழில் ஈ) காடுகள் [விடை: ஈ]

6. மூன்றாம் துறையில் அடங்குவது
அ) போக்குவரத்து ஆ) காப்பீடு இ) வங்கியல் ஈ) அனைத்தும் [விடை: ஈ]

7. எந்த துறையில் தொழிலமைப்பு முறை சேர்க்கப்படவில்லை?
அ) முதன்மைத் துறை ஆ) இரண்டாம் துறை
இ) சார்புத் துறை ஈ) தனியார் துறை விடை: ஈ)

8. **பட்டியல் I - ஐ பட்டியல் II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையை தேர்ந்தெடு.**

| | பட்டியல் - I | | பட்டியல் - II |
|---|---|---|---|
| அ) | வேளாண்மை, காடுகள், மீன்பிடிப்பு மற்றும் சுரங்கம் | 1. | ஒழுங்கமைக்கப்படாத துறை |
| ஆ) | உற்பத்தி, மின் உற்பத்தி, எரிவாயு மற்றும் குடிநீர் விநியோகம் | 2. | சார்புத் துறை |
| இ) | வாணிபம், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு | 3. | இரண்டாம் துறை |
| ஈ) | குழுமப் பதிவற்ற நிறுவனங்கள் மற்றும் வீட்டுத் தொழில்கள் | 4. | முதன்மைத் துறை |

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 2 | 3 | 1 | 4 |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

[விடை: ஆ]

9. **எந்த டெல்லி சுல்தான் வேலையின்மை பிரச்சனையை தீர்க்க "வேலை வாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார்?**

அ) முகமது பின் துக்ளக் ஆ) அலாவுதீன் கில்ஜி
இ) ஃபெரோஷ் ஷா துக்ளக் ஈ) பால்பன் [விடை: இ]

10. **__________ துறை பதிவு செய்யப்பட்டு மற்றும் அரசு விதிகளை பின்பற்றுகிறது.**

அ) வேளாண்மை ஆ) ஒழுங்கமைக்கப்பட்ட
இ) ஒழுங்கமைக்கப்படாத ஈ) தனியார் [விடை: ஆ]

11. **__________ துறை வேலை பாதுகாப்பு மற்றும் அதிக ஊதியம் வழங்குகிறது.**

அ) பொதுத் துறை ஆ) ஒழுங்கமைக்கப்பட்டத் துறை
இ) ஒழுங்கமைக்கப்படாத துறை ஈ) தனியார் துறை [விடை: ஆ]

12. **பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

அ) வங்கியியல் ஆ) ரயில்வே
இ) காப்பீடு ஈ) சிறு தொழில் [விடை: ஈ]

13. **பொதுத் துறை மற்றும் தனியார் துறை என்று எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?**

அ) பணியாளர்களின் எண்ணிக்கை ஆ) இயற்கை வளங்கள்
இ) நிறுவனங்களின் உரிமை ஈ) வேலைவாய்ப்பின் நிலை [விடை: இ]

14. **கூற்று** (A) : ஒழுங்குபடுத்தப்படாத துறையின் பொருளாதார பண்பு என்பது வீட்டினுள் உற்பத்தி நடவடிக்கை மற்றும் சிறுதொழில் செய்வதாகும்.

**காரணம்** (R): இங்கு குறைவான ஊதியமும் மற்றும் வேலைகள் முறையாக வழங்கப்படுவதில்லை.

அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, கூற்றுக்கான காரணம் சரி

ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி கூற்றுக்கான காரணம் தவறு.

இ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு

ஈ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி **[விடை: அ]**

15. **தொழிலாளர்களைப் பணியமர்த்துபவர்களாகவும், தங்கள் பணிக்கான வெகுமதிகளைச் செலுத்தும் நபர்களாகவும் உள்ளவர்கள்**

அ) ஊழியர் ஆ) முதலாளி

இ) உழைப்பாளி ஈ) பாதுகாவலர் **[விடை: ஆ]**

16. **தமிழ் நாட்டில் ______ துறையில் அதிக நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.**

அ) வேளாண்மை ஆ) உற்பத்தி

இ) வங்கியல் ஈ) சிறுதொழில் **[விடை: அ]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ______ துறையில் வேலைவாய்ப்புகள் நிலையான மற்றும் முறையானவை அல்ல. **விடை: ஒழுங்கமைக்கப்படாத**

2. பொருளாதார நடவடிகைகள் ______ மற்றும் ______ துறைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. **விடை: பொதுத்துறை, தனியார்**

3. ______ எப்போதும் இந்தியாவின் வளர்ச்சிக் கொள்கையில் ஒரு முக்கிய உறுப்பாக இடம் பெற்றுள்ளது. **விடை: வேலைவாய்ப்பு**

4. வேலைவாய்ப்பு முறை மாற்றத்திற்கான காரணம் ______ **விடை: வாழ்க்கை முறை மாற்றம்**

5. இந்தியாவில் வேலை வாய்ப்பின் தன்மை ______ **விடை: பல பரிமாணங்களைக் கொண்டது.**

6. ______ பொருளாதாரம் என்பது நாட்டு மக்களின் எண்ணிக்கை, உழைக்கும் திரன் பெற்றவர்களைக் குறிக்கும். **விடை: ஒரு நாட்டின்**

7. பொதுத்துறை என்பது ____ **விடை: அரசு நிர்வாகம் செய்யும் நிறுவனங்களாகும்.**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | பொதுத் துறை | - | சேவை நோக்கம் |
| 2. | தனியார் துறை | - | இலாப நோக்கம் |
| 3. | முதன்மைத் துறை | - | கோழி வளர்ப்பு |
| 4. | சார்புத் துறை | - | வங்கியல் |

## IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி :

**1. பொருளாதாரத்தில் தொழிலாளர் சக்தி என்றால் என்ன?**

- பொருளியல் செயல்பாடுகளில் மேல்நிலையில் அலுவலர்களாகவும், கீழ்நிலையில் தொழிலாளர்களாகவும் இந்த ஊழியர்களைப் பணியமர்த்தி அவர்களின் பணிக்கு ஊதியம் தருவோர் எனவும் தொழிலாளர், மனித சக்தி பயன்படுத்தப்படுகின்றது.
- விவசாயம் சார்ந்த முதன்மைத் துறையிலும், தொழிற்சாலைகள் சார்ந்த இரண்டாம் துறையிலும், சேவைகள் சார்ந்த சார்புத் துறையிலும் தொழிலாளர் சக்தி முதன்மை சக்தியாக உள்ளது.

**2. குழந்தைகளையும் 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களையும் ஏன் பணிக் குழுக்களாக கருதக் கூடாது?**

- 15 வயதுக்குக் குறைந்தவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர். 60 வயதைக் கடந்தவர்கள்,
- உற்பத்தி சார்ந்த வேலையை மேற்கொள்வதற்கு உடல் ரீதியாகத் தகுதியற்றவர்கள் அல்ல என்பதால் அவர்கள் உடல் உழைப்பைச் செய்ய முடியாது.
- எனவே அவர்களை பணிக்குழுக்களாக கருதக் கூடாது.

**3. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?**

பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள்

| | | |
|---|---|---|
| 1. | **முதன்மை துறை** | விவசாயம், காடுகள், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, கோழி, மீன் வளர்ப்பு, போன்றவை. |
| 2. | **இரண்டாம் துறை** | உற்பத்தி, சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள், கட்டுமானம் போன்றவை. |
| 3. | **சார்புத் துறை** | போக்குவரத்து, காப்பீடு, வங்கி, வணிகம், தொலைத்தொடர்பு, அரசு மற்றும் அரசு சாரா சேவைகள் போன்றவை. |

**4. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடுமையான சரிவு ஏற்பட்டாலும், தமிழ்நாட்டில் தொடர்ந்து விவசாயத்தில் அதிகமாக ஈடுபடுவதன் காரணத்தைக் கூறுக.**

- விவசாயமல்லாத துறைகள், உழைப்பாளர்கள் குழு, தொழில்களை மாற்றி கொள்வதற்குப் போதுமான அளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை.
- எனவே தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பின் வளர்ச்சியின் பெரும் பகுதி, குறைந்த வருமானத்தை அளிக்கின்ற அமைப்பு ரீதியாக ஒருங்கமைப்படாத முறைசாரா துறைகளின் பங்களிப்பாகவே உள்ளது.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி :

1. விவரி.
அ) முதன்மைத் துறை ஆ) இரண்டாம் துறை இ) சார்புத் துறை

**முதன்மைத் துறை:**

முதன்மைத் துறை விவசாயத் துறை என்றும் அழைக்கப்படுகிறது. முதன்மைத் துறைக்கு உதாரணங்கள் விவசாயம், காடுகள், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பால் பண்ணை போன்றவை.

**இரண்டாம் துறை:**

இரண்டாம் துறை தொழில் துறை என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டாம் துறைக்கு உதாரணங்கள் உற்பத்தி, சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள், கட்டுமானம் போன்றவை.

**சார்புத் துறை:**

சார்புத் துறை சேவைத் துறை என்றும் அழைக்கப்படுகிறது. சார்புத் துறைக்கு உதாரணங்கள் போக்குவரத்து, காப்பீடு, வங்கி, வணிகம், தொலைத்தொடர்பு, வீட்டுமனை விற்பனை, அரசு மற்றும் அரசு சாரா சேவைகள் போன்றவை.

2. இந்தியாவில் வேலைவாய்ப்பு அமைப்பைப் பற்றி விளக்குக.

இந்தியாவில் வேலைவாய்ப்பின் தன்மையானது பல பரிமாணங்களைக் கொண்டது. சிலருக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும். ஒரு சிலருக்கு ஓராண்டில் சில மாதங்களுக்கே வேலை கிடைக்கும்.

முதன்மைத் துறை, இரண்டாம் துறை, சார்புத் துறை எனப் பொருளியல் வருவாய் ஈட்டும் துறைகள் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளியல் அமைப்பின் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு அமைப்பு குறிக்கிறது. வேலைவாய்ப்பு பாணி நாட்டுக்கு நாடு மாறுகின்ற போதிலும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உழைப்பாளர் குழு பெரும்பகுதி முதன்மைத் தொழிலும் சிறிய குழுக்கள் இரண்டாம் மூன்றாம் நிலைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளன.

இந்திய வளர்ச்சிக் கொள்கையின் ஒரு முக்கியமான கூறாக வேலைவாய்ப்பு இடம் பெற்றுள்ளது.

3. ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் மற்றும் ஒழுங்கமைக்கப் படாத துறைகளில் நிலவுகின்ற வேலைவாய்ப்பை ஒப்பிடுக.

**ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள்:**

✦ பதிவு செய்யப்பட்டது, அரசாங்க விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் பின்பற்றுகின்றன.

✦ ஊழியர்களுக்கென சங்கங்கள் உண்டு.

- வங்கிகள், ரயில்வே, காப்பீடு, உற்பத்தி தொழிற்சாலைகள், மத்திய மாநில அரசுத் துறைகள் இதில் அடங்கும்.
- இதில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பணிப் பாதுகாப்பு உண்டு, அதிகம் ஊதியம் பெறுகின்றனர்.
- நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம், ஊதியத்துடன் கூடிய விடுமுறை, மருத்துவ உதவித்தொகை, காப்பீடு போன்ற சலுகைகள் பணியாளர்களுக்கு உண்டு.

**ஒழுங்கமைக்கப்படாத துறைகள்:**

- இதற்கு விதிகளும், ஒழுங்கு முறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை.
- பணியாளர்களுக்கு குறைந்த கூலியே கிடைக்கும் தொடர்ச்சியான வேலையும் இருக்கிறது.
- வீட்டு உபயோகப் பொருட்கள் செய்தல், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் இதில் அடங்கும்.
- பணியாளர்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு, விடுமுறை நாட்கள், மருத்துவ விடுப்பு போன்றவை இருக்காது.
- வேலை உத்திரவாதம் இல்லை. எப்போது வேண்டுமென்றாலும் வேலையை இழக்க நேரிடும்.

**4. பொதுத் துறையும், தனியார் துறையும் வேறுபடுத்துக.**

| | பொதுத் துறை | தனியார் துறை |
|---|---|---|
| (i) | சேவை நோக்கம் கொண்டது. | இலாப நோக்கம் கொண்டது. |
| (ii) | சொத்துக்கள் அரசாங்கத்துக்குச் சொந்தம். | சொத்துக்கள் தனி நபர்களுக்குச் சொந்தம். |
| (iii) | ஊதியம் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது. | ஊதியம் உரிமையாளரால் வழங்கப்படுகின்றது. |

## VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்.

**1. உங்களை சுற்றி பெரியவர்கள் செய்யும் அனைத்து வகையான வேலைகளையும் நீண்ட பட்டியலிடுக. நீங்கள் அவைகளை எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்.**

| வேலை | துறை |
|---|---|
| விவசாயம் | முதன்மைத் துறை |
| ஆசிரியர் | சார்புத் துறை |
| ஆடு மேய்ப்பவர் | முதன்மைத் துறை |
| பால்காரர் | முதன்மைத் துறை |
| வெல்டர் | இரண்டாம் துறை |
| LIC ஏஜெண்ட் | சார்புத் துறை |

**2. ஒரு ஆராய்ச்சி அறிஞர் சென்னையிலுள்ள உழைக்கும் மக்களைப் பார்த்து என்னவெல்லாம் கண்டறிந்தார்.**

| வேலை செய்யும் இடம் | வேலைவாய்ப்பு முறை | பணி செய்யும் மக்களின் சதவிகிதம் |
|---|---|---|
| அரசாங்கத்துடன் பதிவு செய்யப்பட்ட அலுவலகங்கள், தொழிற்சாலைகள் | ஒழுங்குபடுத்தப்பட்ட முறை | 15 |
| முறையான உரிமங்களுடன் பொது இடங்களில் சொந்தமானக் கடைகள், அலுவலகம், மருத்துவமனைகள் | | 20 |
| தெருவில் வேலை செய்யும் மக்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், வீட்டுத் தொழிலாளர்கள் | | 25 |
| சிறு தொழில்களில் வேலை செய்வது வழக்கமாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்படுவதில்லை. | | |

**ஆராய்ச்சி அறிஞர் கண்டறிந்தவை:**

1. 25 % மக்கள் இரண்டாம் துறையைச் சார்ந்தவர்கள்
2. 20 % மக்கள் சேவைத் துறையைச் சார்ந்தவர்கள்
3. 15 % மக்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட துறையில் பணியாற்றுகின்றனர்.
4. 25 % மக்கள் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் பணியாற்றுகின்றனர்.

**3. பின்வரும் தொழில்களை முதன்மை, இரண்டாம் மற்றும் சார்புத் துறைகளின் கீழ் பட்டியலிடுக.**

பால் விற்பனையாளர், தையல்காரார், ஆசிரியர், மருத்துவர், விவசாயி, தபால்காரர், பொறியாளர், குயவர், மீனவர், கைவினைஞர்கள், காவலர், வங்கியாளர், ஓட்டுநர், தச்சர்.

| முதன்மைத் துறை | இரண்டாம் துறை | சார்புத் துறை |
|---|---|---|
| பால் விற்பனையாளர் | தையல்காரர் | ஆசிரியர் |
| விவசாயி | பொறியாளர் | மருத்துவர் |
| மீனவர் | குயவர் | தபால்காரர் |
| | ஓட்டுநர் | காவலர் |
| | தச்சர் | வங்கியாளர் |
| | கைவினைஞர்கள் | |

## VII.சிந்தனை வினா:

1. **தற்போது மூன்றாம் துறை உலகத்தில் முதலிடத்தில் உள்ளது. காரணம் கூறுக.**

**காரணம்:**

- விவசாயத்தில் வேலைப் பல, செலவு கூடி வருகின்றது.
- பட்டப் படிப்பு படித்தவர்கள் சார்புத் துறையில் பணியாற்ற விரும்புகின்றனர்.
- சார்புத் துறையில் வேலை பாதுகாப்பு உள்ளது.
- இது போன்ற காரணங்களை எழுதுக.

## VIII. வாழ்வியல் திறன்:

1. **உங்களுடைய கிராம பொருளாதாரத்தைப் பற்றி விவாதிக்கவும்.**

கிராமத்தில் முதலாம், இரண்டாம், சார்பு துறையில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை, அவர்களின் வருமானம், கிராமத்திற்கு கிடைக்கும் மற்ற பொது வருமானங்கள், கிராமத்திற்காக செலவிடப்படும் செலவினங்கள் போன்றவைகளை கிராம பொருளாதாரத்தில் கொண்டு வரலாம்.

# கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1. **பொருந்தாத ஒன்றைக் கூறுக.**

அ) விவசாயம் ஆ) காடுகள்
இ) பால் பண்ணை ஈ) வங்கி [விடை: ஈ]

2. **ஒழுங்கமைக்கப்படாத துறையைச் சார்ந்தவர்**

அ) வங்கி ஊழியர் ஆ) பழுதுகள் சரி பார்ப்போர்
இ) ரயில் இஞ்சின் ஓட்டுநர் ஈ) தாசில்தார் [விடை: ஆ]

3. **பொருந்தாத ஒன்றைக் கூறுக.**

அ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்
ஆ) இந்திய உருக்கு ஆணையம்
இ) பாரத தொலை பேசி நிறுவனம்
ஈ) டி வி எஸ் மோட்டார் நிறுவனம் [விடை: ஈ]

4. **கூற்று** (A) : ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் ஊழியர்கள் பல இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

**காரணம்** (R) : அங்கு தொழிலாளர்களுக்கு சிறப்பு ஆதாயமோ, வேலை நிரந்தரமோ கிடையாது.

அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி கூற்றுக்கான காரணம் சரி.
ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி கூற்றுக்கான காரணம் தவறு

இ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு.

ஈ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி. **[விடை: அ]**

5. **கூற்று** (A) : நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் தமிழகத்தில் விவசாயமே அதிகம் பேருக்கு வேலையளித்துக் கொண்டிருக்கிறது.

**காரணம்** (R) : தமிழ் நாட்டில் வளமான மண் காணப்படுகின்றது. விவசாயம் செய்ய தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளில் போதிய அளவு தண்ணீர் உள்ளது.

அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி கூற்றுக்கான காரணம் சரி.

ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி கூற்றுக்கான காரணம் தவறு

இ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு.

ஈ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி. **[விடை: இ]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. காப்பீடு ஒரு ________ துறையாகும். **விடை: ஒருங்கமைக்கப்பட்ட**
2. அரசு ஊழியர்களைக் கொண்டு செயல்படும் துறை ஊழியர்களுக்கு ________ உண்டு. **விடை: பணிப் பாதுகாப்பு**
3. வேலை உத்திரவாதம் இல்லாத துறை ________ துறை ஆகும். **விடை: ஒருங்கமைக்கப்படாத**
4. பாரத தொலை பேசி நிறுவனம் ஒரு ________ நிறுவனம் ஆகும். **விடை: பொதுத்துறை**
5. அரசு நிர்வாகம் செய்யும் நிறுவனங்கள் ________ நிறுவனங்கள் ஆகும். **விடை: பொதுத் துறை**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | முதன்மைத் துறை | - | விவசாயத் துறை |
| 2. | இரண்டாம் துறை | - | தொழில் துறை |
| 3. | மூன்றாம் துறை | - | சார்புத் துறை / சேவைத் துறை |
| 4. | முதல் வேலைவாய்ப்பு அலுவலகம் | - | பெரோஸ் ஷா துக்ளக் |
| 5. | இரயில்வே | - | ஒழுங்கமைக்கப்பட்ட துறை |

## IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி:

**1. முதன்மை துறையின் அங்கங்கள் யாவை?**

முதன்மைத் துறை அல்லது விவசாயத் துறையின் அங்கங்கள், அடிப்படை உற்பத்தி, விவசாயம், காடுகள், சுரங்கம், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பால் பண்ணை போன்றவைகளாகும்.

**2. இரண்டாம் துறையின் அங்கங்கள் யாவை ?**

இரண்டாம் துறையின் அங்கங்கள் தொழிற்சாலைகள் உற்பத்தி பொருட்கள், சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள், கட்டுமானம் போன்றவை ஆகும்.

3. **சார்புத் துறையின் அங்கங்கள் யாவை ?**

சார்புத் துறை அல்லது சேவைத் துறையின் அங்கங்கள் போக்குவரத்து, காப்பீடு, வங்கி, வணிகம், தொலைத்தொடர்பு, வீட்டுமனை விற்பனை, அரசு மற்றும் அரசு சாரா சேவைகள் போன்றவை ஆகும்.

4. **ஒழுங்கமைக்கப்படாத துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் யாவை?**

ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் அதற்கென விதிகளும், ஒழுங்கு முறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை. இவற்றில் வேலை செய்வோர்க்குக் குறைந்த கூலி கொடுக்கப்படுவதோடு பல நேரங்களில் தொடர்ச்சியாக வேலையும் இருக்காது. பெரும்பாலும் அவர்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு, விடுமுறை நாட்கள், மருத்துவ விடுப்பு போன்றவை இல்லை. வேலை உத்திரவாதம் கிடையாது.

**செயல்பாடு:**

தஞ்சாவூர் அருகேயுள்ள வல்லம் கிராமத்தில் கோவிந்தன் வசிக்கிறார். அவருக்கு சுப்பையா, குமரன் என இரண்டு மகன்கள் உள்ளனர். அவருக்குச் சொந்தமாக மூன்று ஏக்கர்கள் நிலமும் ஒரு மாட்டுவண்டியும் இருக்கிறது. தங்களின் நிலத்தில் அவர்கள் நெல்லும் வேர்க்கடலையும் பயிரிடுகின்றனர். சுப்பையா விவசாய வேலைகளில் அவரது தந்தைக்கு உதவி செய்கிறார். இன்னொரு மகனான குமரன், காப்பீட்டு நிறுவனம் ஒன்றில் வளர்ச்சி அலுவலராக இருக்கிறார். இவர்களின் தாய் கமலா அதே கிராமத்தில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார். கோவிந்தனின் அடுத்த வீட்டுக்காரரான கோபாலின் மகன் பாண்டியன், சென்னையில் சிட்கோ தொழிற்பேட்டையில் பணிபுரிகிறார்.

1. **கோவிந்தன் குடும்பத்தில் சேவைத்துறையில் வேலை செய்வோர் எத்தனை பேர்? அவர்களின் பெயர்களை எழுதுக.**

இரண்டு நபர்கள் : 1) கமலா (கோவிந்தனின் மனைவி) 2) குமரன் (கோவிந்தனின் மகன்)

2. **சுப்பையாவும் அவரது தந்தையும் எந்த துறையில் வேலை செய்கின்றனர்?**

முதன்மைத் துறை.

3. **பாண்டியன் ஒரு முதன்மைத் துறையில் வேலை செய்கிறாரா?**

இல்லை – இரண்டாம் துறை.

பொருளியல்

# பாடம் 3 பணம் மற்றும் கடன்

## பயிற்சிகள்

### I. சரியான விடையை தேர்ந்தெடு.

1. பண்டைய காலத்தில் பண்ட மாற்றத்திற்கு பதிலாக பொது மதிப்பீடாக பயன்படுத்தப்பட்ட உலோகம் ________ (தங்கம் / இரும்பு). **விடை: தங்கம்**
2. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையிடம் _______ (சென்னை / மும்பை) **விடை: மும்பை**
3. சர்வதேச வணிகத்தில் பயன்படுத்தப்படும் நாணய முறை ______ (அமெரிக்க டாலர் / பவுண்டு) **விடை: அமெரிக்க டாலர்**
4. ஜப்பான் நாட்டின் பணம் ________ என்று அழைக்கப்படுகிறது. (யென் / யுவான்) **விடை: யென்**

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. __________ வணிகத்தின் முதல் வடிவம். **விடை: பண்டமாற்று**
2. பண விநியோகம் ________ பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. **விடை: நான்கு**
3. இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் அச்சகம் தொடங்கப்பட்ட இடம் ________ . **விடை: நாசிக்**
4. பணப்பரிமாற்றத்தை முறைப்படுத்துகின்ற பொறுப்பு ________ க்கு உள்ளது. **விடை: அரசு**
5. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பணம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ________ . **விடை: பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்**

### III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | அமெரிக்க டாலர் | - | சர்வதேச அங்கீகாரம் |
| 2. | நாணய சுழற்சி | - | 85% |
| 3. | ஏ.டி.எம் | - | தானியங்கி இயந்திரம் |
| 4. | உப்பு | - | பணத்தின் மாற்று |
| 5. | ரியால் | - | சவுதி அரேபியா |

### IV. குறுகிய வினாக்களுக்கு விடையளி.

**1. பணம் ஏன் கண்டுபிடிக்கப்பட்டது?**

✦ பொருள்களைப் பண்டமாற்றம் செய்வதில் காலப்போக்கில் சிக்கல்கள் உருவாகின.

- இப்பிரச்சனைகளுக்கு விடைகாண பண்டங்களை மாற்றிக் கொள்ளப் பொதுவான மதிப்புள்ள ஒரு பொருளை நிர்ணயம் செய்தனர். இது பெரும்பாலும் உலோகமாக இருந்தது.
- ஆகவே இந்த உலோகங்களே முதன் முதலில் பயன் படுத்தப்பட்ட பணம். இவ்வாறு பணம் கண்டுபிடிக்கப்பட்டது.

**2. பண்டைய காலப் பணம் என்பது யாது?**

தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் பண்டமாற்று முறைக்குப் பதிலாக பயன்படுத்தப்பட்டது. இதுவே பண்டைய காலப் பணம் எனப்படும்.

**3. பண்டைய காலத்தில் பண்டமாற்று முறையில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் யாவை?**

தோல், மணிகள், ஓடுகள், புகையிலை, உப்பு, சோளம் மற்றும் அடிமைகள் கூட பண்ட மாற்றுப் முறையில் பயன்படுத்தப்பட்டவை ஆகும்.

**4. நறுமணப்பாதை என்றால் என்ன? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?**

- தமிழகத்தின் கிழக்குக் கடலில் இருந்து மிளகு மற்றும் நறுமணப் பொருள்கள், முத்து, ரத்தினங்கள், மாணக்கம் மற்றும் மென்மையான பருத்தி ஆடைகள் போன்ற பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.
- இவற்றில் மிளகு மற்றும் நறுமண பொருள்கள் அதிக இடம் பெற்றதால் இந்த வணிகப்பாதை நறுமணப்பாதை என்று அழைக்கப் பட்டது.

**5. இயற்கைப் பணம் என்றால் என்ன?**

தங்கம் மற்றும் வெள்ளி ஆகிய உலோகங்கள் நாடுகளுக்கு இடையோன பண்ட மாற்றத்தில் பொது மதிப்பீடாக பயன்படுத்தப்பட்டன. பொது மதிப்பீடாக பயன்படுத்தப்பட்டன. இவையே இயற்கை பணம் என்று அழைக்கப்பட்டன.

**6. குறைந்த மதிப்பிலான நாணயங்கள் ஏன் அதிகளவு அச்சடிக்கப்பட்டன?**

- குறைந்த மதிப்பு கொண்ட உலோகங்களைக் கொண்டு நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. இவை சிறிய மதிப்பிலான பொருள்கள் வாங்கவும் விற்கவும் பயன்படுத்தப்பட்டன.
- எழை எளிய மக்களின் பணமாக இவை பயனபடுத்தப்பட்டன. இதனால் குறைந்த மதிப்பிலான நாணயங்கள் அதிக அளவு அச்சடிக்கப்பட்டன.

**7. அந்நியச் செலாவணி என்றால் என்ன?**

நாடுகளுக்கு இடையேயான பணம் செலாவணி என அழைக்கப்படுகிறது. உள்நாட்டில் அந்நிய நாட்டுச் செலாவணி, அந்நியச் செலாவணி என்று அழைக்கப்படுகிறது.

## V. விரிவான விடையளி.

**1. நவீன உலகில் பணப்பரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரி.**

- வங்கிச் சேமிப்பில் உள்ள பணத்தை எடுப்பதற்கு நேரடியாக வங்கிக்குச் சென்று படிவம் நிரப்பி அல்லது காசோலை வழங்கி, பெறுவதற்குப் பதிலாக, பணம் எடுக்கும் இயந்திரம்

மூலம் தேவையான பணத்தை எடுக்க தானியங்கி பணம் வழங்கும் அட்டை பயன்படுகிறது.

- இதன்மூலம் ஆங்காங்கு நிறுவப்பட்டுள்ள பணம் எடுக்கும் இயந்திரம் மூலம் எந்த நேரமும் நமக்குத் தேவையான பணத்தினை நமது கணக்கிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளலாம். இதேபோல வங்கிக்குச் செல்லாமலேயே நமது கணக்கில் பணம் செலுத்தும் வசதி சில வங்கிகளில் உள்ளது.
- இதேபோல முன்னதாகப் பணம் பெற்று, பின்னர் செலுத்தும் வகையில் கடன் அட்டை (Credit Card) பயன்படுத்தப்படுகிறது.
- பணப்பரிமாற்றம் செய்வதற்குக் காசோலை (Cheque) அல்லது கேட்பு வரைவோலை (Demand Draft) போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கு மாற்றாக இணைய வழி பரிமாற்றங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. இதன் மூலம் நினைத்த நேரத்தில் உலகின் எந்த மூலையில் இருப்பவருக்கும் நொடியில் பணப்பரிமாற்றம் செய்யலாம்.
- இதேபோல் அலைபேசிமூலமும் மின்னணு பரிமாற்றம் செய்யும் தொழில்நுட்பம் பரவலாகப் பயன்பாட்டில் உள்ளது.

**2. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி.**

இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பட தொடங்கியது. 1937 லிருந்து நிரந்தரமாக மும்பையில் இயங்கி வருகிறது. இது 1949இல் நாட்டுடைமையாக்கப்பட்டது.

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்:**

- பணப்பரிமாற்றத்தைப் பராமரிக்கும் பொறுப்பும் கண்காணிக்கும் கடமையும் ஓர் அரசுக்கு இருக்கிறது. பொதுவாகப் பணம் பதுக்கி வைக்கப்படுவது பொருளியலில் தவிர்க்கப்பட வேண்டும். இதனால் வங்கிகளில் பணம் சேமிக்கப்படுகிறது.
- வங்கிகளில் சேமிக்கப்படும் பணத்தில் பெரும் பங்கு தொழில் வளர்ச்சிக்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் ஏழைகளின் நலனுக்கும் பயன்படுத்தப்படுகிறது.
- இந்தியாவில் அனைத்து வங்கிகளும் 1969ல் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் பணப்புழக்கத்தை ஒழுங்குபடுத்தும் பணியினை இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொள்கிறது.
- அச்சடிக்கப்பட்டப் பணத்தில் 85% புழக்கத்தில் விடப்படுகிறது. ஆகஸ்ட் 2018 நிலவரப்படி இந்தியாவில் ரூபாய் 19 லட்சம் கோடி மதிப்பிலான பணம் புழக்கத்தில் உள்ளது.

**3. பணத்தின் செயல்பாடுகளைப் பட்டியலிடுக.**

பண்டமாற்று முறையினால் உருவாகும் சிக்கல்களுக்கு மாற்றாக பணத்தின் வரவு பெரிதும் உதவி வருகிறது. பணம் என்பது ஒரு பரிமாற்ற ஊடகமாகவும், ஒரு கணக்கின் அலகாகவும், மதிப்புச் சேமிப்பாகவும், மாறுபடும் பண வழங்கீடுக்கான தரப்படுத்தலாகவும் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பணத்தின் முக்கிய செயல்பாடுகள்:**

- பரிமாற்ற ஊடகம்

- கணக்கு அலகு
- மதிப்பீட்டினைச் சேமித்தல்

**பரிமாற்ற ஊடகம்**

ஒரு நாட்டில் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்குப் பணம் தடையின்றி ஏற்கப்பட வேண்டும்.

**கணக்கு அலகு**

ஒருநாட்டில்அனைத்துநுகர்பொருள்கள்,தயாரிப்புகள்,சேவைகள்எனஅனைத்துக்குமான மதிப்பினைக் கணக்கிடுவதில் பணம் பொதுவான, தரப்படுத்தப்பட்ட அலகாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு புத்தகத்தின் விலை ₹ 50 என்றால் அப்புத்தகத்தின் விலை 50 பண அலகுகளுக்கு இணையானது என்று பொருள். ஒரு நாட்டில் நடைபெறும் நிதி பரிவர்த்தனைகளை அளவிடவும் கணக்குகளாக பராமரிக்கவும் பணம் பயன்படுகிறது.

**மதிப்பீட்டினைச் சேமித்தல்**

பணத்தினைச் சேமிப்பதன் மூலம் எதிர்காலத்துக்கான வாங்கும் ஆற்றலைச் சேமிப்பதாகும்.

**4. பண விநியோக முறையைப் பற்றி எழுதுக.**

- பண விநியோகம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- $ப_1$ = மக்களிடம் புழக்கத்தில் உள்ள பணம் மற்றும் நாணயங்கள் + அனைத்து வணிக, கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகை + ரிசர்வ் வங்கி வைப்புத்தொகை.
- $ப_2$ = $ப_1$ + அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்குகளில் சேமிக்கப்பட்டுள்ள தொகை.
- $ப_3$ = $ப_1$ + அனைத்து வணிக, கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள கால வைப்புத்தொகை,
- $ப_4$ = $ப_3$ + அஞ்சல் அலுவலகங்களின் மொத்த வைப்புத் தொகை

## VI. சரியானக் கூற்றை எழுதுக :

**அ 1. நாகரிகம் வளர்ச்சியடைந்த இடங்களில் பண்ட மாற்று முறை செழித்தோங்கியது.**

**2. இதுவே வணிகத்தின் முதல் வடிவம்**

i) 1 சரி, 2 தவறு　　ii) இரண்டும் சரி

iii) இரண்டும் தவறு　　iv) 1 தவறு 2 சரி　　**விடை: iv**

**ஆ 1. உலக நாடுகளில் பெரும்பான்மையான பணப்பரிமாற்றங்கள் அமெரிக்க டாலர் மதிப்பிலேயே நடைபெறுகிறது.**

**2. உலக வணிகத்தை அமெரிக்கா மட்டுமே நடத்துகிறது.**

i) இரண்டு கூற்றுகளும் சரி　　ii) இரண்டு கூற்றுகளும் தவறு

iii) 1 சரி 2 தவறு　　iv) 1 தவறு 2 சரி　　**விடை: iii**

## VII. செயல்திட்டம் மற்றும் செயல்பாடுகள்

**1. உள்ளூர் அருங்காட்சியகத்திற்குச் சென்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள நாணயங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரி.**

மாணவர் சுய செயல்பாடு.

**2. நீ வெளிநாட்டிற்குச் சென்று கட்டிடக்கலை வல்லுநருக்கான மேற்படிப்பைப் பயில கல்விக் கடன் பெறும் வகையில் வங்கி மேலாளருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.**

அனுப்புநர்

Xxxxxxxx,
வீட்டு எண். 148, காந்திநகர்,
சென்னை.

பெறுநர்

வங்கி மேலாளர் அவர்கள்,
கனரா வங்கி,
தாம்பரம் கிளை,
சென்னை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: வெளிநாடு சென்று கட்டிடக்கலை வல்லுநருக்கான மேற்படிப்பு பயில கல்விக் கடன் வழங்குதல் – தொடர்பாக

நான் கடந்த ஆண்டு B.Arch பட்டப்படிப்பை திருச்சியில் உள்ள மாநில கட்டிடக்கலை கல்லூரி படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன். எனக்கு கட்டிடக்கலை சம்பந்தமான மேல் படிப்பை வெளிநாடு சென்று படிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. மத்திய, மாநில அரசு ஒதுக்கியுள்ள கல்விக் கடன் தொகையில் கல்விக் கடன் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனோடு எனக்குச் சொந்தமான வீட்டின் பத்திரத்தின் நகல் மற்றும் ஆதார், வங்கி புத்தகம் அனைத்தையும் இணைத்துள்ளேன். ஆகவே, தாங்கள் எனக்கு கல்விக் கடனாக ₹ 8,00,000 (எட்டு இலட்சம் மட்டும்) வழங்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
Xxxxxxxx

## VIII. வாழ்க்கைத் திறன் :

**1. ஒரு 20 ரூபாய் நோட்டை உற்றுநோக்கி, அதில் நீ காண்பவற்றை பட்டியலிடுக.**

| | |
|---|---|
| <br>ரூபாய் நோட்டின் முன்பக்கம் | ✦ இந்திய ரிசர்வ் வங்கி என்று ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் எழுதப்பட்டிருக்கும்.<br>✦ இருபது ரூபாய் என்று ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் எழுதப்பட்டிருக்கும்.<br>✦ இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் கையொப்பம் இடம் பெற்றிருக்கும். |
| <br>ரூபாய் நோட்டின் பின்பக்கம் | ✦ இந்திய ரிசர்வ் வங்கி என்று ஹிந்தியில் எழுதப்பட்டிருக்கும்.<br>✦ இடது புறமாக இருபது ரூபாய் என்று தமிழ் உட்பட 15 மொழிகளில் அச்சிடப்பட்டிருக்கும். |

**2. உன் வீட்டின் ஒரு மாதத்திற்கான வரவு செலவு திட்டத்தை தயார் செய்க.**

மாத வரவு - செலவு திட்டம்

எனது குடும்ப உறுப்பினர்கள்: அப்பா, அம்மா, தங்கை, தாத்தா, பாட்டி.

எனது அப்பாவின் மாத வருமானம் 55,000/-

அம்மா - இல்லத்தரசி

தங்கை - 5ம் வகுப்பு

| வ.எண் | விவரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1. | அப்பாவின் வருமானம் | 55/000.00 | |
| 2. | கோவில் வழிபாடு செலவு | | 200.00 |
| 3. | குடும்பத்தின் மலிகை மற்றும் காய்கறிகள் | | 25,000.00 |
| 4. | வீட்டு வாடகை | | 6,000.00 |
| 5. | அரிசி | | 4,000.00 |
| 6. | மின்சாரம் | | 500.00 |
| 7. | தண்ணீர் | | 500.00 |
| 8. | தொலைபேசி | | 500.00 |
| 9. | தொலைக்காட்சி மற்றும் இணைப்பு சேவை | | 200.00 |
| 10. | மருத்துவ செலவு | | 2,000.00 |
| 11. | எரிவாயு | | 500.00 |
| 12. | பெட்ரோல் (வாகனத்திற்கு) | | 1,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 13. | குழந்தைகள் கல்விச் செலவு | | 5,000.00 |
| 14. | போக்குவரத்துச் செலவு | | 500.00 |
| 15. | விழா மற்றும் பிறந்தநாள் கொண்டாட்டம் | | 2,000.00 |
| 16. | கேளிக்கை மற்றும் உணவு | | 1,000.00 |
| 17. | திண்பண்டங்கள் | | 500.00 |
| 18. | செய்தித்தாள் மற்றும் பத்திரிசை | | 500.00 |
| 19. | மாதச் சேமிப்பு | | 3,000.00 |
| 20. | அவசரத் தேவைகள் | | 2,000.00 |
| | மொத்தம் | 55/000.00 | 54/900.00 |

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ஷெர்ஷா சூரி அறிமுகப்படுத்தப்பட்ட வெள்ளி நாணயம் __________ எனறழைக்கப்பட்டது.

**விடை : ருபியா**

2. இந்திய ரிசர்வ் வங்கி ________ ஆண்டு முதல் செயல்பட தொடங்கியது. **விடை : 1935**

3. __________ என்ற இணையதளத்தின் மூலம் மாணவர்கள் கல்வி கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.

**விடை : வித்யா லட்சுமி கல்வி கடன் திட்டம்**

4. தற்போது உலகில் தயாரிக்கப்படும் பொருள்களில் ________ விழுக்காடு விற்பனை அல்லது சேவைத்தொழிலை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. **விடை : 90 விழுக்காடு**

5. இந்தியாவில் 1917ல் முதன் முதலில் __________ மற்றும் __________ நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. **விடை : ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்**

### II. குறுகிய வினாவிற்கு விடையளி :

**1. மாணவர்களுக்கான கல்விகடன் வழங்குவது பற்றி ஏதேனும் இரண்டு கூறு.**

✦ உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ மேற்படிப்பை தொடர முனைவோருக்கு வழங்கப்படுகின்றன.

✦ முழு நேர மற்றும் பகுதி நேர பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு அல்லது தொழில் படிப்புகளுக்காக வழங்கப்படுகின்றன.

**2. பண விநியோகத்திற்கான நான்கு பிரிவுகளைப் பற்றி கூறு.**

$ப_1$ மக்களின் புழக்கத்திலுள்ள பணம் மற்றும் நாணயங்கள் + அனைத்து வணிக, கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள வைப்புத் தொகை + ரிசர்வ் வங்கி வைப்புத் தொகை.

ப$_2$ ப$_1$ + அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்குகளில் சேமிக்கப்பட்டுள்ள தொகை

ப$_3$ ப$_1$ + அனைத்து வணிக கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள காலவைப்புத் தொகை.

ப$_4$ ப$_3$ + அஞ்சல் அலுவலகங்களின் மொத்த வைப்புத் தொகை.

**3. சுய உதவிக்குழுக்கள் என்றால் என்ன?**

குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்பவர்கள் அல்லது குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபடுபவர்கள் குழுவாக அமைத்து சிறு சேமிப்பில் ஈடுபடுகின்றனர். இவர்கள் சுய உதவு குழுக்கள் என்றழைக்கப் படுகின்றனர்.

**4. ATM பற்றி குறிப்பு வரைக.**

தானியங்கி பணம் வழங்கும் அட்டையின் (ATM) மூலம் ஒருவர் எந்த நேரத்திலும் தனது வங்கி கணக்கில் இருக்கும் பணத்தினை எடுக்கலாம்.

**5. வங்கிகளில் சேமிக்கப்படும் தொகை எதற்காக பெரும் பங்கு பயன்படுகிறது.**

வங்கிகளில் சேமிக்கும் பணத்தில் பெரும் பங்கு தொழில் வளர்ச்சிக்கும், பொருளியல் வளர்ச்சிக்கும், ஏழைகளின் நலனுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

பொருளியல்

# பாடம் 4 தமிழகத்தில் வேளாண்மை

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு.
   அ) 27% ஆ) 57% இ) 28% ஈ) 49% [விடை: ஆ]
2. இவற்றுள் உணவல்லாத பயிர் எது?
   அ) கம்பு ஆ) கேழ்வரகு இ) சோளம் ஈ) தென்னை [விடை: ஈ]
3. 2014 – 15ஆம் ஆண்டின் நெல் உற்பத்தித்திறன்.
   அ) 3,039 கி.கி. ஆ) 4,429 கி.கி.
   இ) 3,519 கி.கி. ஈ) 2,775 கி.கி. [விடை: ஆ]
4. தமிழகத்தின் வேளாண் உற்பத்தித்திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே.
   அ) குறைந்துள்ளது ஆ) எதிர்மறையாக உள்ளது
   இ) நிலையாக உள்ளது ஈ) அதிகரித்துள்ளது [விடை: ஈ]
5. தமிழகத்தின் வடகிழக்குப் பருவமழை பொழியும் மாதங்கள்.
   அ) ஆகஸ்ட் – அக்டோபர் ஆ) செப்டம்பர் – நவம்பர்
   இ) அக்டோபர் – டிசம்பர் ஈ) நவம்பர் – ஜனவரி [விடை: இ]

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. தமிழக மக்களில் பெரும்பான்மையினர் ________ தொழிலையே சார்ந்திருக்கின்றனர்.
   விடை: வேளாண்
2. தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது ________ பருவமழையாகும்.
   விடை: வடகிழக்கு
3. தமிழகத்தின் மொத்தப் புவியியல் பரப்பு ________ ஹெக்டேர்கள் ஆகும்.
   விடை: 1,30,33000

## III. பொருத்துக (விடையுடன்) :

1. உணவில்லாத பயிர்கள் – தென்னை
2. பருப்பு வகைகள் – உளுந்து, துவரை, பாசிப்பயிறு
3. வடகிழக்குப் பருவமழை – அக்டோபர் – டிசம்பர்
4. குறு விவசாயிகள் – ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர்
5. 2015 –இல் விவசாயிகளின் எண்ணிக்கை – 79,38,000

## IV. குறுகிய வினாக்களுக்கு விடையளி.

**1. உணவுப் பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும், உணவல்லாத பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக.**

- உணவுப்பயிர்கள் – நெல், சோளம், கம்பு, கேழ்வரகு.
- உணவல்லாத பயிர்கள் – தென்னை, பனை.

**2. பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு மாறுவதற்கான காரணிகள் யாவை?**

- மழைப்பொழிவு
- நீர் இருப்பு
- காலநிலை
- சந்தைவிலை

**3. நிலத்தடி நீரின் அளவையும் தன்மையையும் யாரால் கண்காணிக்கப்படுகிறது?**

நிலத்த நீரின் அளவையும், தன்மையையும் மத்திய நிலத்தடி நீர் வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

**4. நெல் உற்பத்தித் திறனை 1965 முதல் 2015 வரை பட்டியலிடுக.**

- நெல்லின் உற்பத்தித்திறன் 1965–66 –ஆம் ஆண்டுகளில் 1409 கிலோவாக இருந்தது.
- 1978–76 –ஆம் ஆண்டுகளில் 2,029 கிலோவாக உயர்ந்தது.
- பத்து ஆண்டுகள் சென்றபின் நெல்லின் உற்பத்தித்திறன் 2,712 கிலோ.
- 2014–15 –ஆம் ஆண்டில் உற்பத்தித் திறன் 4,429 கிலோ.

| ஆண்டு | நெல்லின் உற்பத்தித்திறன் |
|---|---|
| 1965–66 | 1,409 கிலோ |
| 1975–76 | 2,029 கிலோ |
| 10 ஆண்டுகளுக்குப் பின் | 2,712 கிலோ |
| 2014–15 | 4,429 கிலோ |

**5. பயிர்களின் விளைச்சல் எதனைச் சார்ந்து இருக்கிறது?**

பயிர்களின் விளைச்சல் பயிரிடப்படும் பரப்பளவு மட்டுமின்றி பயிர்களின் உற்பத்தித் திறனையும் சார்ந்து இருக்கிறது.

**6. சிறு மற்றும் குறு விவசாயிகளை வேறுபடுத்துக.**

| | சிறு விவசாயிகள் | குறு விவசாயிகள் |
|---|---|---|
| 1. | 1–2 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்வோர். | 1 ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர். |
| 2. | இவர்கள் விவசாயம் செய்யும் பரப்பளவு 26 விழுக்காடு ஆகும். | இவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு, மொத்த சாகுபடி பரப்பளவில் 36 விழுக்காடு ஆகும். |
| 3. | தமிழகத்தில் சிறுவிவசாயிகள் 14% உள்ளனர். | குறுவிவசாயிகள் 14% உள்ளனர். |



## V. விரிவான விடையளி.

**1. தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- தமிழகத்தில் வற்றாத நதிகள் இல்லை. தமிழகம் தனது தேவைக்கான நீரை வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவ மழைகளிலிருந்து பெறுகிறது.
- தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்குப் பருவ மழையாகும்.
- வடகிழக்குப் பருவமழை நீரைத் தேக்கங்களிலும், கண்மாய்கள், ஏரிகளிலும் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர்.
- தமிழக வேளாண்மைக்கான நீரை வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவை வழங்குகின்றன.
- தமிழகத்தில் 2,239 வாய்கால்கள் ஏறத்தாழ 9,750 கிலோ மீட்டர் தூரம் பாய்கின்றன.
- சிறு ஏரிகள் 7,985 –ம், பெரிய ஏரிகள் 33,142 –ம் உள்ளன.
- திறந்த வெளிக் கிணறுகள் 15 இலட்சம் உள்ளன.
- 3,54,000 ஆழ்துளைக்கிணறுகள் பயன்படுத்தப்படுகின்றன.
- இந்த ஆதாரங்களைக் கொண்டே தமிழகத்தில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகிறது.

**2. வேளாண்மைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

- தமிழக வேளாண்மை பெரும் அளவிற்கு நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது.
- நிலத்தடி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்துவது பல இன்னல்களையும் உருவாக்கவல்லது.
- நிலத்தடியிலிருந்து நீரை எடுக்கும் அளவும் மழைப் பொழிவின் போது நிலத்தடிக்குச் செல்லும் நீரின் அளவும் சமமாக இருந்தால் துன்பம் இல்லை.

✦ மாறாக எடுக்கும் அளவு கூடக்கூட நீர்மட்டம் கீழே செல்லும். ஒன்று நீர் முற்றிலும் வற்றிப் போகலாம். அல்லது பாசனத்திற்கு உதவாத நீராக மாறவும் வாய்ப்புண்டு.

**3. வேளாண் நீர் ஆதாரம் பற்றி ஆய்வு செய்க.**

✦ தமிழகத்தில் 2,239 வாய்க்கால்கள் ஏறத்தாழ 9,750 கிலோ மீட்டர் தூரம் பாய்கின்றன.

✦ சிறு ஏரிகள் 7,985 –ம் பெரிய ஏரிகள் 33,142 –ம் உள்ளன.

✦ திறந்த வெளி கிணறுகள் 15 இலட்சம் உள்ளன.

✦ இவையல்லாது 3,54,000 ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தப்படுகின்றன.

✦ ஏறத்தாழ 3.68 இலட்சம் ஹெக்டேர் பரப்பு ஏரிகளின் வாயிலாக நீர் பெறுகின்றன.

✦ வாய்க்கால்கள் 6.68 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு நீர் வழங்குகின்றன.

✦ ஆழ்துளைக் கிணறுகள் 4.93 இலட்சம் ஹெக்டேருக்கும், திறந்த வெளிக் கிணறுகள் 11.91 இலட்சம் ஹெக்டேர் நிலத்திற்கும் பாசன வசதி வழங்குகின்றன.

**4. தமிழகத்தில் விளையும் பயிர்களைப் பட்டியலிடுக.**

✦ தமிழகத்தில் பயிரிடப்பட்ட நிலத்தின் மொத்தப் பரப்பளவில் 2014–15 ஆம் ஆண்டில் 59 இலட்சத்து 94 ஆயிரம் ஹெக்டேர்களாக இருந்தது. இதில் 76 விழுக்காடு பரப்பளவில் உணவில்லாத பயிர்கள் பயிரிடப்பட்டன.

✦ நெல் சாகுபடிதான் பெரிய அளவில் 30 விழுக்காடு மேற்கொள்ளப்படுகிறது.

✦ இதர உணவுப் பயிர்கள் 12 விழுக்காடு பரப்பளவும் பயிரிடப்படுகின்றன.

✦ சிறு தானிய சாகுபடி குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது.

✦ சோளம் 7 விழுக்காடு நிலப்பரப்பிலும் கம்பு ஒரு விழுக்காடு பரப்பிலும் கேழ்வரகு 1.7 விழுக்காடு பரப்பிலும் இதர சிறு தானியங்கள் 6 விழுக்காடு பரப்பிலும் 2014–15 ஆம் ஆண்டில் பயிரிடப்பட்டன.

✦ மழைப்பொழிவு, நீர் இருப்பு, காலநிலை, சந்தைவிலை போன்ற பல காரணிகளின் விளைவாகப் பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு.

## செயல்பாடு

**VI. ஆண்டுக்கு ஆண்டு மாறும் செயல்பாடுகள்.**

**1. கிராமம் அல்லது நீங்கள் வசிக்கும் பகுதியில் விளையும் உணவுப் பயிர்களையும், உணவில்லாத பயிர்களையும் ஆராய்க.**

உணவுப் பயிர்கள் : நெல், கம்பு, சொளம், கேழ்வரகு.

உணவில்லாத பயிர்கள் : தென்னை, பனை.

**2. தஞ்சாவூர் எந்தப்பயிருக்குப் பெயர் பெற்றது?**

- ✦ தஞ்சாவூர் நெற்பயிருக்கு பெயர் பெற்றது.
- ✦ தஞ்சை என்பதற்கு "குளிர்ந்த வயல்கள் நிறைந்த பகுதி" என்று பொருள்.
- ✦ தமிழ்நாட்டில் தஞ்சையில்தான் அதிக அளவில் நெல் பயிர் உற்பத்தி செய்யப்படுகிறது. ஏனெனில் வளமான மண், நீர் மற்றும் காலநிலை நிலவுவதால் தமிழ்நாட்டின் நெற்களஞ் சியமாக தஞ்சாவூர் திகழ்கிறது.

**3. தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் தஞ்சாவூர் மாவட்டத்தின் நெல் விளைச்சல் குறித்த தரவுகளை சேகரிக்கவும்.**

| வ.எண். | நெல்லின் வகை | விளைச்சலுக்காகும் காலம் |
|---|---|---|
| 1. | தங்கசம்பா | 145 நாட்கள் |
| 2. | வாகை | 135 நாட்கள் |
| 3. | பொம்மி | 135 நாட்கள் |
| 4. | கருப்பு கவுணி | 135 நாட்கள் |
| 5. | கவுணி | 150 நாட்கள் |
| 6. | ராஜமன்னார் | 145 நாட்கள் |
| 7. | இலுப்பைப்பூ சம்பா | 135 நாட்கள் |

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. 2011 –ஆம் ஆண்டில் வேளாண்மையில் ஈடுபட்டிருந்த பெண்களின் விழுக்காடு _______ .
   **விடை: 55.**
2. தமிழகத்தின் பெரும்பாலான விவசாயிகள் _______ ஆவர். **விடை: குறு விவசாயிகள்.**
3. வேளாண் தொழிலில் ஈடுபடுவோரில் பெரும்பகுதியினர் _______ ஆவர்.
   **விடை: நிலமற்ற கூலித்தொழிலாளிகள்.**
4. தமிழகத்தின் மொத்தப் புவியியல் பரப்பு _______ ஆவர். **விடை: 1,30,33,000 ஹெக்டேர்.**
5. மறைநீர் எனும் பதம் 1990 –ஆம் ஆண்டு _______ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
   **விடை: டோனி கலன்.**
6. உணவல்லாத பயிர்களில் _______ முதலிடம் வகிக்கிறது. **விடை: தென்னை.**

## II. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | தென் இந்தியாவின் மூன்றாவது பெரிய ஆறு | – | காவிரி |
| 2. | உணவுப்பயிர் | – | கம்பு |
| 3. | தரிசு | – | வேளாண்மைக்குப் பயன்படாத நிலப்பகுதி |
| 4. | மணிலா | – | வேர்க்கடலை |
| 5. | மழை நீர் | – | டோனி ஆலன் |

## III. குறுகிய வினாக்களுக்கு விடையளி.

**1. மறைநீர் என்றால் என்ன?**

மறைநீர் என்பது உணவு அல்லது மற்ற உற்பத்தி பொருட்கள் ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு வணிகம் செய்யப்படும் போது அவற்றோடு மறைமுகமாக அவற்றிற்காக செலவிடப்பட்ட நீரும் செல்கிறது. இதுவே மறைநீர் எனப்படும்.

**2. காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள அணைகள் யாவை?**

காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் மேட்டூர் அணை மற்றும் கல்லணை கட்டப்பட்டுள்ளது.

**3. நிலத்தடிநீர் என்று எதனைக் கூறுகிறோம்?**

புவியின் நிலப்பரப்பிற்குக் கீழ் சேமிக்கப்படும் நீர் நிலத்தடி நீர் என அழைக்கப்படுகிறது.

**4. தமிழகத்தின் முக்கிய உணவுப் பயிர்கள் யாவை?**

தமிழகத்தின் முக்கிய உணவுப்பயிர்கள்: நெல், சோளம், கம்பு, கேழ்வரகு.

பொருளியல்

# பாடம் 5 இடம்பெயர்தல்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

**1. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கள் தொகை எவ்வளவு?**

அ) 121 கோடி ஆ) 221 கோடி

இ) 102 கோடி ஈ) 100 கோடி **[விடை: அ]**

**2. வெளிக் குடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம் எது?**

அ) இராமநாதபுரம் ஆ) சென்னை

இ) கோயம்புத்தூர் ஈ) வேலூர் **[விடை: ஆ]**

**3. 2015 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்களின் கல்வியறிவற்றோரின் சதவீதம் எவ்வளவு?**

அ) 7% ஆ) 75% இ) 23% ஈ) 9% **[விடை: அ]**

**4. ஏழை மக்கள் இடப் பெயர்வு மேற்கொள்வது எதற்காக?**

அ) வாழ்வாதாரத்திற்காக ஆ) வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள

இ) சேவைக்காக ஈ) அனுபவத்தைப் பெற [விடை: அ]

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ________ மற்றும் ________ அடிப்படையில் இடப் பெயர்வு கணக்கிடப்படுகிறது.

**விடை: பிறப்பு, வாழிடம்.**

2. மக்களின் நகர்வு, நகர்ப்புறங்களைவிட கிராமப் புறங்களில் ________ காணப்படுகின்றன.

**விடை: அதிகமாக.**

3. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கிராமப்புற இந்தியாவில் ________ மக்கள் இடம் பெயர்ந்தவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது. **விடை: 37%.**

4. பெண்கள் அதிக அளவில் இடம் பெயர்வதற்கான காரணம் ________. **விடை: திருமணம்.**

5. இடம் பெயர்வு நகர்வு என்பது ________ உள் நகர்வுகளைக் கொண்டதாகும்.

**விடை: பல்வேறு வகைப்பட்ட.**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | இடம் பெயர்வுக் கொள்கை | – | இடம் பெயர்தலின் அளவை குறைப்பது |
| 2. | பெண் இடப் பெயராளர் | – | திருமணம் |
| 3. | சென்னை | – | வெளிக் குடியேற்றம் அதிகம் |
| 4. | வசதிவாய்ப்புடைய இடம் பெயராளர் | – | வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள |
| 5. | சேலம் | – | வெளிக் குடியேற்றம் குறைவு |
| 6. | ஆண் இடம் பெயராளர் | – | வேலை |

## IV. சுருக்கமான விடையளி :

**1. இடப் பெயர்தலுக்கான காரணங்களைப் பட்டியிலிடுக.**

- ✦ வேலை
- ✦ கல்வி
- ✦ திருமண வாழ்வு
- ✦ வாழ்வாதாரம்
- ✦ வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த
- ✦ இன்னும் பிற காரணங்கள்

**2. இந்தியாவில் பெண்கள் இடப் பெயர்தலுக்கான முக்கிய காரணங்கள் யாவை?**

திருமணமும், திருமணம் சார்ந்த இடம் பெயர்வும் பெண்களின் அதிக அளவிலான இடம் பெயர்வுக்குக் காரணமாக அமைகிறது.

**3. மிகக் குறைவான எண்ணிக்கையில் வெளி இடப் பெயர்வைக் கொண்ட தமிழ்நாட்டிலுள்ள நான்கு மாவட்டங்களின் பெயர்களைக் கூறுக.**

- ✦ கடலூர்
- ✦ கரூர்
- ✦ திருவண்ணாமலை
- ✦ வேலூர்
- ✦ நாமக்கல்
- ✦ சேலம்
- ✦ திண்டுக்கல்
- ✦ கிருஷ்ணகிரி
- ✦ நீலகிரி
- ✦ தருமபுரி.

**4. ஏழை மக்கள் மற்றும் வகதி வாய்ப்புடைய மக்கள் இடம் பெயர்வதற்கான காரணங்கள் யாவை?**

ஏழை மக்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காகவும், வசதி வாய்ப்புடைய மக்கள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் இடம் பெயர்கின்றனர்.

**5. தமிழ்நாட்டிலிருந்து இடப் பெயர்ந்தவர்கள் செல்லும் நான்கு நாடுகள் மற்றும் சதவீதத்தினைப் பட்டியலிடுக.**

- ✦ சிங்கப்பூர் – 20%
- ✦ ஐக்கிய அரபு எமிரேட்ஸ் – 18%
- ✦ சவுதி அரேபியா – 16%
- ✦ அமெரிக்க ஐக்கிய நாடுகள் – 13%

**6. இடப் பெயர்ந்தோர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழில்களைப் பற்றி ஆய்வுகள் வெளிப்படுத்துவது யாது?**

இடப் பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் வேலையின் தன்மை குறித்த ஆய்வில் மிகவும் திறமை வாய்ந்த வேலைகளிலும், சாதாரணமாக செய்யக்கூடிய வேலைகளிலும், நடுத்தரமான வேலைகளிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

## V. விரிவான விடையளி.

**1. இடப் பெயர்வு கொள்கையின் நோக்கங்கள் யாவை?**

**இடப் பெயர்தலின் அளவை குறைப்பதற்கான வழிகள் :**

- அதிக அளவிலான இடப் பெயர்தல் கிராமப்புறத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையினைப் பிரதிபலிக்கிறது.
- எனவே கிராமப்புறங்களின் மீது தலையீட்டில் கவனம் இருத்தல் வேண்டும்.
- ஏழ்மை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையை குறைக்கும் விதமான கிராம வளர்ச்சித் திட்டங்கள் அதிக அளவிலான இடப் பெயர்தலை குறைப்பதற்கு உதவியாக அமையும்.

**இடம் பெயர்ந்து நகர்தலை திசை திருப்புதல் :**

- பெரு நகரங்கள் நோக்கி குவியும் இடம் பெயர்தலைத் திசை மாற்றி அமைத்திடும் கொள்கைகள் விரும்பத்தக்க கொள்கை முடிவுகள் ஆகும்.
- நிலப்பரப்பு சார்ந்த குடிபெயர்தலால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கு, நகர்புறங்களை பரவலாக்கும் வடிவமைப்புகள் பொருத்தமான உத்திகளாக அமையும்.

**2. இடப் பெயர்வின் முறைகளைப் பற்றி கலந்துரையாடுக.**

**குமார்:** இடப் பெயர்வு என்றால் என்ன?

**அருண்:** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்வதை இடப் பெயர்வு என்கிறோம்.

**குமார்:** இடப் பெயர்வு எதன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது?

**அருண்:** பிறப்பிடம் அடிப்படையிலும், வாழிடம் அடிப்படையிலும் கணக்கிடப்படுகிறது.

**குமார்:** மக்கள் இடப் பெயர்வு ஆவதற்கு என்ன காரணம்?

**அருண்:** ஏழை மக்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காகவும், வசதி வாய்ப்புடைய மக்கள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் இடம் பெயர்கின்றனர்.

**குமார்:** அதிகம் இடம் பெயர்வது கிராமப்புற மக்களா அல்லது நகர்புற மக்களா?

**அருண்:** கிராமப் புற மக்கள்.

**குமார்:** கிராமப் புற மக்கள் ஏன் அதிகம் இடம் பெயர்கின்றனர்?

**அருண்:** கிராமத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மை அடிப்படை வசதியின்மை.

**குமார்:** இதற்கு தீர்வு என்ன?

**அருண்:** ஏழ்மை மற்றும் பாதுகாப்பு அற்ற தன்மையை குறைக்கும் விதமான கிராம வளர்ச்சித் திட்டங்களை நடைமுறை படுத்த வேண்டும்.

**3. தமிழ்நாட்டின் இடப்பெயர்வில் காணப்படும் ஆர்வமுள்ள தகவல்கள் சிலவற்றைத் தெளிவுபடுத்துக.**

- ✦ தமிழ்நாட்டின் மொத்த 7.2 கோடி மக்களில் 3.13 கோடி மக்கள் இடம்பெயர்ந்தவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
- ✦ இந்திய நாட்டின் இடம் பெயர்வு 37% இருந்த சமயத்தில் தமிழ்நாட்டின் இடம் பெயர்வு உச்சமாக 43% இருந்தது.
- ✦ இடம் பெயர்வின் பரவல் நகர்புறங்களில் இருப்பதைவிட கிராமப்புறங்களில் மிக அதிகமாகக் காணப்படுகிறது.
- ✦ கிராமப்புறங்களில் 37% இடம் பெயர்ந்தவர்கள் நகர்புறங்களில் இடம் பெயர்ந்தவர் 27% தான்.
- ✦ இடம் பெயர்வு பெரும்பாலும் பெண்களை விட பெண்கள் மிக அதிக சதவீதம் பெற்று முன்னிலை வகிக்கின்றனர்.
- ✦ பெண்கள் அதிகம் இடம் பெயர்விற்கான காரணமாகத் திருமணத்தை குறிப்பிடுகின்றனர்.
- ✦ ஆண்கள் இடப்பெர்வுக்கு காரணமாக திகழ்வது வேலை ஆகும்.
- ✦ வியாபாரம், வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு காரணங்களாகத் தமிழர் பல நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.
- ✦ காலனியாதிக்கத்தின் போது தொழிலாளர்கள் வேலை தேடியும், வருமானத்திறாகாககவும் பிற காலணி நாடுகளை நோக்கி இடம் பெயர்ந்தனர்.
- ✦ அண்மை காலங்களில் தமிழகத்திலிருந்து வளைகுடா நாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு மிக அதிக அளவில் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

**4. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்களின் கல்வித் தகுதியை ஆய்வு செய்க.**

- ✦ கல்வியறிவு அற்றவர்கள் – 7%.
- ✦ 10ஆம் வகுப்பு படித்தவர்கள் – 30%.
- ✦ 12ஆம் வகுப்பு படித்தவர்கள் – 10%.
- ✦ தொழிற்பயிற்சி படித்தவர்கள் – 15%.
- ✦ பட்டப் படிப்பு படித்தவர்கள் – 11%.
- ✦ தொழில் கல்வி முடிந்தவர்கள் – 12%.
- ✦ முதுகலை பட்டதாரிகள் – 11%.

மிகவும் திறமை வாய்ந்த வேலைகளிலும் சாதாரணமாகச் செய்யக்கூடிய வேலைகளிலும் சாதாரண மாகச் செய்யக் கூடிய வேலைகளிலும் நடுத்தரமான வேலைகளிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

## V. சரியான தொடரை எழுதுக.

1. சமீப காலமாக வேலையாட்கள் தமிழ்நாட்டில் இருந்து ஆப்பிரிக்காவிற்குச் செல்கின்றனர்.
2. தமிழ்நாட்டில் இடம் பெயர்வின் பரவலானது, கிராமங்களோடு ஒப்பிடும்போது நகர்ப்புறங்களில் அதிகம்.
3. இடம் பெயர்வின் நகர்வானது ஒரே மாதிரியான உள் நகர்வினைக் கொண்டதாகும்.
4. பத்து நபர்களில் இரு நபர்கள் இடம் பெயர்பவர் ஆவர்.

**விடை: சரியான தொடர் ஏதுமில்லை.**

1. சமீபகாலமாக வேலையாட்கள் தமிழ்நாட்டில் இருந்து வளைகுடா நாடுகள் ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஆஸ்திரேரியா ஆகிய நாடுகளுக்குச் செல்கின்றனர்.
2. தமிழ்நாட்டில் இடப் பெயர்வின் பரவலானது நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் அதிகம்.
3. இடம் பெயர்வு நகர்வு பல்வேறு வகைப்பட்ட உள் நகர்வுகளைக் கொண்டதாகும்.
4. ஐந்து பேரில் இருவர் இடம் பெயர்ந்தவராக உள்ளனர்.

## VI செயல்பாடு

**1. உன் வகுப்பு மற்றும் பள்ளி மாணவர்களோடு கலந்துரையாடி எத்தனை மாணவர்களின் பெற்றோர் இடம் பெயர்ந்துள்ளனர் என்பதைப் பற்றி ஒரு புள்ளி விவரத் தரவை தயார் செய்க.**

(சுய செயல்பாடு)


**2. கிராமப்புறத்திலிருந்து கிராமம், கிராமப்புறத்திலிருந்து நகரம், நகரத்திலிருந்து கிராமம் மற்றும் நகரத்திலிருந்து நகரம் போன்ற இடம் பெயர்வு தொடர்பான படங்களை சேகரித்து படத் தொகுப்பைத் தயார் செய்தல்.**

(சுய செயல்பாடு)

## VII வாழ்வியல் திறன்கள்

**1. உன் வகுப்பில் உள்ள மாணவர்கள் பேசும் பல மொழிகள் பற்றிய தரவுகளைச் சேகரித்து, வட்ட விளக்கப்படம் தயார் செய்க.**

| | | |
|---|---|---|
| தமிழ் பேசும் மாணவர்கள் | = | 32 |
| உருது பேசும் மாணவர்கள் | = | 13 |
| தெலுங்கு பேசும் மாணவர்கள் | = | 4 |
| மலையாளம் பேசும் மாணவர்கள் | = | 1 |
| **மொத்தம் மாணவர்கள்** | = | **50** |



## கூடுதல் வினாக்கள்

### I கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. 2015ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் கல்வி அறிவு அற்றவர்களின் சதவீதம் _______. **விடை: 7%.**
2. தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூரில் குடியேறுபவர்களின் சதவீதம் _______. **விடை: 20%.**
3. சர்வதேச குடியேறுபவர்களில் பெண்களின் சதவீதம் _______. **விடை: 15%.**
4. சர்வதேச குடியேறுபவர்களில் ஆண்களின் சதவீதம் _______. **விடை: 85%.**
5. 2010 ஆம் ஆண்டின் மிகப்பெரிய இடப்பெயர்வு பாதை _______ இடையேயான இடப்பெயர்வுப் பாதை. **விடை: மெக்ஸிகோ – அமெரிக்க ஐக்கிய நாடு.**
6. உலகிலேயே நீண்டதூரம் இடம் பெயரும் பறவை _______. **விடை: ஆர்டிக் டெர்ன்.**

### II. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | 2011 கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கள் தொகை | – | 121 கோடி |
| 2. | 2011 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை | – | 7.2 கோடி |
| 3. | தமிழகத்தின் கிராமப்புறங்கள் இடம் பெயர்ந்தவர் சதவீதம் | – | 41% |
| 4. | தமிழகத்தில் நகர்ப்புறங்களில் இடம் பெயர்ந்தவர் சதவீதம் | – | 35% |
| 5. | தமிழ்நாட்டில் பெண்களின் இடம் பெயர்வு சதவீதம் | – | 51% |

www.nammakalvi.in